பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 20 சனிக்கிழமை 04.07.2020 கதிர் 108

## 152 பேர் விடுவிப்பு!

வவுனியா, ஜூலை 04

வெளிநாடுகளில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த 152 பேர் இன்று விடுவிக்கப்பட்டனர்.

2

# திருகோணமலை மண் தமிழருக்கே சொந்தம்!

## தேர்தலில் நிரூபித்துக் காட்டுவோம்; தலைவர் சம்பந்தன் அறைகூவல்

(அப்துல் சலாம் யாசீம்)

திருமலை, ஜூலை 04

திருகோணமலை தமிழர்களுக்குச் சொந்தமான மண் என்பதை இம்முறை பொதுத்தேர்தலில் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் அறைகூவல் விடுத்துள்ளார்.

2



## மஹிந்தானந்த கட்டாயம் மன்னிப்பு கோரவேண்டும்

### நவீன் திஸாநாயக்க வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 04

இலங்கை அணி வீரர்களிடம் மஹிந்தானந்த அளுத்கமகே மன்னிப்பு கோரவேண்டும் - என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நுவரெலியாவில் இன்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள்

2

## சஜித்தின் 13 பிளஸ் வாக்குறுதி தமிழருக்குக் கிடைத்த வெற்றி

### சம்பந்தன் தெரிவிப்பு

(அப்துல் சலாம் யாசீம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய போது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வுடன் ஒருமித்த நாட்டுக்குள் தீர்வும் வழங்குவேன் என்று வாக்குறுதியளித்துள்ளார். இப்படி அவர் கூற முன்வந்தமை

2

## வெடிபொருள் தயாரித்தவர் அது வெடித்ததில் படுகாயம்!

### இயக்கச்சிப் பகுதியில் சம்பவம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 04

நாட்டு வெடிபொருள் தயாரித்த ஒருவர், வெடிவிபத்து ஏற்பட்டு படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

2

# வடக்கு - கிழக்கு மக்களின் மனதை வென்றே தீருவோம்

## அம்பாந்தோட்டையில் மஹிந்த சபதம்

கொழும்பு, ஜூலை 04

தெற்கு மக்களின் ஆதரவில் ஜனாதிபதித் தேர்தலில் நாம் வெற்றி பெற்றிருந்தாலும் வடக்கு மற்றும் கிழக்கு மக்களைப் புறக்கணிக்கவில்லை. வடக்கு, கிழக்கு மக்களின் மனங்களை வெல்வதற்கான நடவடிக்கைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

2



## கிளிநொச்சி விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 04

கிளிநொச்சி - அக்கராயன் பகுதியில் இன்று மதியம் நடந்த விபத்தில் கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகே இருந்த நாவல் மரத்தில் மோதியதால் இந்த விபத்து நிகழ்ந்தது. அவருடன் பயணித்த மற்றொருவர் சிறு காயத்துடன் உயிர் தப்பியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கராயன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாட்டை மோதியது கார்!



வவுனியா, ஜூலை 04

வவுனியா வடக்கு புளியங்குளம் சன்னாசிப்பரந்தன் பகுதியில் மாட்டுடன் கார் மோதி ஏற்பட்ட விபத்தில் கார் கடுமையான சேதமடைந்தது. அதன் சாரதி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். மாடு அந்த இடத்திலேயே பலியானது.

2

## வீரர்களை ஏன் விசாரித்தீர்கள்?

### மஹிந்தானந்த கேள்வி

கொழும்பு, ஜூலை 04

ஆட்டநிர்ணய சதியில் விளையாட்டு வீரர்கள் எவரையும் குறிப்பிடவில்லை. ஆகவே எதனடிப்படையில் அவர்களை விசாரணைக்கு அழைத்தனரென

2



# குழப்பத்தில் முடிவடைந்த அரசியல் கலந்துரையாடல்

வவுனியா, ஜூலை 04

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வி.எஸ்.சிவகரன் தலைமையில் வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் குழப்பகரமான நிலை ஏற்பட்டபோதிலும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் கைகலப்பு தவிர்க்கப்பட்டது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்துதின் ஏற்பாட்டில் நடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்கும் கட்சிகளின் வேட்பாளர்கள் சிவில் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் கலந்துகொண்ட மக்கள் மன்றம் நிகழ்வு நடைபெற்றது.

இதனை நெறியாள்கைசெய்த வி.எஸ். சிவகரன், சிவில் பிரதிநிதிகளாக கலந்துகொண்டுள்ள சின்மயா மிசன் சுவாமி தவத்திரு வேலன் சுவாமி, பல்கலைக்கழக மாணவன் வி.சாரங்கன், சமூக ஆர்வலர் செ.சுதாகரன் ஆகியோரும் வேட்பாளர்களாக கலந்துகொண்ட காதர் மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், ப.உதயராசா, சிவ. கஜேந்திரகுமார் ஆகியோர் மாத்திரமே கருத்துக்களை முன்வைப்பார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

இதன்போது கருத்துக்களை முன்வைக்க அனுமதியளிக்கப்பட்டவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தபோது சிவகரனால் இடையிடையே கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அனைத்துத் தரப்பினரும் உரையாற்றி இறுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உரையாற்றி முடிந்தபோது சிவகரனால் கேள்விகள் கேட்கப்பட்ட பின்னர் பார்வையாளர்களாக இருந்தவர்கள் மத்தியில் இருந்து ஒருவர் மஸ்தானை நோக்கி கேள்விகளைக் கேட்டார்.

மக்கள் கேள்வி கேட்பதற்கு அனுமதி இல்லை என மற்றவர்களை அனுமதிக்காத நெறியாளர், இந்த நபரை மட்டும் கேள்வி கேட்க அனுமதித்து அமைதியாக இருந்தார்.

அந்த நபர் மஸ்தானை நோக்கி காணாமற்போனோர் விடய,ம் அரசியல் கைதிகள் விடயம் தொடர்பில் கேள்விகளை கேட்டபோது மஸ்தான் அதற்குப் பதிலளித்திருந்தார்.

அடுத்து ஒரு முஸ்லிமாவது தமிழ் வேட்பாளருக்குவாக்களித்தால்இனவாதம் பற்றி பேச்சே வராது எனத் தெரிவித்து தனது கேள்வியை தொடர முட்பட்டபோது காதர் மஸ்தானுடன் வந்தவர்கள் இனவாதக் கருத்தை முன்வைக்கின்றனர் என நெறியாளரிடம் தமது முறைப்பாட்டை முன்வைத்தார்கள்.

இதன்போது மேலும் சிலர் மஸ்தானை நோக்கி கேள்வி எழுப்பியபோது நெறியாளர் அனைவரையும் அமைதி காக்குமாறு தெரிவித்தாலும் குழப்பம் அதிகரித்து எவரையும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இதன்போது காதர் மஸ்தானின் ஆதரவாளர்களுக்கும் சிறிரெலோ கட்சியின் ஆதரவாளர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்படும் நிலை உருவாகியது. சிறிரெலோ கட்சியின் இளைஞரணித் தலைவர் மஸ்தானின் ஆதரவாளர்களை நோக்கிக் கைகளை உயர்த்தியவாறு சென்றிருந்ததுடன் அங்கிருந்த மேலும் இருவருக்கிடையிலும் முரண்பாடு ஏற்பட்டபோது நெறியாளராகச் செயற்பட்ட சிவகரன் இருவரையும் கைகலப்பில் ஈடுபடாத வகையில் செயற்பட்டு பிரச்சினையை சுமூகமாக்கியிருந்தார்.

இந்நிலையில் காதர் மஸ்தான் சம்பவ இடத்தில் இருந்து வெளியேறி சென்றபோது சிலர் கூச்சலிட்டதுடன் நிகழ்வை முழுமையாக குழப்ப முற்பட்டனர். இறுதியில் சிவகரன் செய்வதறியாது நிகழ்வை முடித்து வைத்தார்.

## வெடிபொருள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இயக்கச்சியில் இடம்பெற்றது என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா தேவதாசன் (வயது - 43) என்பவரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மீன் ரின்னுக்குள் சி4 வெடிமருந்தைப் பயன்படுத்தி நாட்டு வெடிபொருள் செய்தபோதே வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது என்று விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது எனப் பளை பொலிஸார் கூறினார்.

## வடக்கு – கிழக்கு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டையில் இன்று நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெற்கு மக்களின் ஆதரவுடனே ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொண்டோம் என்பதை வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும். இருப்பினும் ஜனாதிபதி கோட்டாபய அனைத்து இன மக்களின் தலைவராகவே செயற்படுகின்றார். எமது ஆட்சியில் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்கள் புறக்கணிக்கப்பப்படுவதில்லை. அவர்களையும் இணைத்துக்கொண்டே அரசியல் ரீதியில் பயணிப்போம்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் ஆதரவுஇல்லாமல்ஜனாதிபதித்தேர்தலை வெற்றிகொள்ள முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்த தேர்தல் பிரசாரத்தை தற்போது அக்கட்சியின் இரு தரப்பினரும் முன்னெடுக்கின்றார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் மனங்களை வெல்வதற்கான நடவடிக்கைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும் - என்றார்.

## மாட்டை மோதியது ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி பயணத்த கார் வீதியின் எதிரே சென்ற மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் மாடு உயிரிழந்துள்ளது. கார் முன்பகுதி கடுமையாகச் சேதமடைந்துள்ளது. அதன் சாரதி எவ்வித காயங்களுமின்றி உயிர்தப்பினார். விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

## வீரர்களை ஏன் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

நுவரெலியா - நாவலப்பிட்டி பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 2018 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு பிரிவின் பிரதானியால் அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோவுக்குக் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில், உலகில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் 10 அணிகளில், இலங்கை அணிக்கு எதிராகவே அதிக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆகவே இவ்விடயம் தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுவருகின்றதுஎனக்கூறப்பட்டிருந்தது.

இவ்விடயம் குறித்து அண்மையில் ஊடகத்தில் தெரிவித்திருந்தேன். அதனடிப்படையில்தான் என்னிடம் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவி வாக்குமூலமொன்றைப் பதிவு செய்து கொண்டது. இதன்போது கிரிக்கெட் வீரர்கள் எவரையும் நான் குற்றம் சுமத்தவில்லை.

ஆனால், எதனடிப்படையில் அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை - என்றார்.

## மஹிந்தானந்த கட்டாயம் ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையக பெருந்தோட்ட மக்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத்துக்கு வாக்களிப்பதற்கே விரும்புகின்றனர். இந்நிலையில் இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரான எனக்கு எதிராக திகாம்பரம் போலிப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றார். ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு நான் எதிர்ப்பை வெளியிட்டதாகவும் கூறுகின்றனர். இது முற்றிலும் தவறான கருத்தாகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தொழிற்சங்கங்களும், முதலாளிமார் சம்மேளனமும் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்மானத்துக்கு வருகின்றன. இது விடயத்தில் பெருந்தோட்டத்துறை அமைச்சுக்குப் பொறுப்பு கிடையாது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது நாளொன்றுக்கு 750 ரூபா வழங்கப்படுகின்றது. இதனை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன். பிரதமர் பதவி தொடர்பில் சஜித் கனவு காணலாம். ஆனால், ஓகஸ்ட் 5 ஆம் திகதி மக்களே முடிவெடுப்பார்கள். ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் பிறிதொரு சின்னத்துக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்றே நம்புகின்றேன்.

அதேவேளை, 2011 இல் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர்பில் சாட்சி எதுவுமின்றியே மஹிந்தானந்த அளுத்கமகே முறைப்பாடு முன்வைத்துள்ளார். எனவே, இதற்கான முழு பொறுப்பையும் அவரே ஏற்கவேண்டும். கிரிக்கெட் வீரர்களிடமும் மன்னிப்பு கோரவேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி இரு ஆசனங்களைக் கைப்பற்றும். முயற்சித்தால் மூன்று ஆசனங்களை வெல்லக்கூடியதாக இருக்கும் - என்றார்.

## திருகோணமலை மண் தமிழருக்கே ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையிலுள்ள அவரது வீட்டில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலையில் மிக நீண்ட காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தது.

நடைபெறவுள்ள ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்தலாகும்.

இந்த மாவட்டத்தில் போட்டியிடுகின்ற கட்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறந்த மக்கள் ஆணையைப் பெற வேண்டும்.

இந்த ஆணையானது நாங்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கும், அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அரசுடனும், சர்வதேசத்துடனும் பேச்சுகளை நடத்த ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

இந்தத் திருகோணமலை மண்ணில் பாரம்பரியமாக - நூற்றாண்டுக்கணக்காக வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் இந்த மண்ணுக்கே உரியவர்கள் என்பதை நாங்கள் நிரூபிக்க வேண்டுமாக இருந்தால் சிறந்த ஆணையை திருகோணமலை மாவட்ட மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அற்ப சொற்பமான வாக்குகளைப் பெறுகின்ற கட்சிகளுக்கு உங்களுடைய பொன்னான வாக்குகளை அளித்து அதைச் சீரழிக்க வேண்டாம் - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள், கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## 152 பேர் ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோவிட் - 19 நோய்த்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்தன .

அந்தவகையில் கடந்த மாதம் 19 ஆம் திகதி டுபாய், பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்ட 150 ற்கும் மேற்பட்டோர் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நிலையில் இன்று அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கொரோனா தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## சஜித்தின் 13 பிளஸ் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழருக்குக் கிடைத்த ஒரு மகத்தான வெற்றி என்றே நான் நினைக்கின்றேன்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள அவரது வீட்டில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரப் பகிர்வு, அரசியல் தீர்வு தொடர்பில் சஜித் இன்று மாத்திரம் எமக்கு நன்மை தரும் வகையில் கருத்துத் தெரிவிக்கவில்லை. அவர் தொடர்ந்து இதைக் கூறி வருகின்றார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனினும், அந்த நிலைப்பாட்டில் அவர் தொடர்ந்து உறுதியாக இருக்கின்றார் எனின் அது எமக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும்தான் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வேண்டும் என்ற முடிவுக்கு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், அவருடைய அரசும் முன்வந்திருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவும் எமக்குக் கிடைத்த வெற்றியாகும் - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயனற்ற அறிவிப்புகள்

தேர்தல் ஆணையத்திலிருந்து பல செய்திகள், அறிவிப்புகள் வெளி வருகின்றன. ஆனால் அவை குறித்து விளக்கங்கள், விவரங்கள் வெளியாவதில்லை. அதனால் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புகள் தொடர்பில் மக்களுக்கு - வாக்களர்களுக்கு - வேட்பாளர்களுக்கு - தெளிவும் நம்பிக்கையும் பிறப்பதில்லை.

தேர்தல் காலத்தில் அரச அதிகாரிகளின் இடமாற்றங்களை தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியின்றிச் செய்யக் கூடாது என்பது சட்ட விதி. அது எந்தச் சட்ட ஏற்பாட்டின் கீழ் இருக்கின்றது, அதை மீறினால் என்ன நடவடிக்கை, மீறிச் செயற்படுபவர்கள் எப்படித் தண்டிக்கப்படுவர் என்பவை எல்லாம் இன்னும் பரீட்சித்துப் பார்க்கப்படாத விடயங்கள்.

ஆனால் வடக்கிலேயே இப்படி அரச அதிகாரிகள் கண் மூடித்தனமாக இட மாற்றப்பட்டமையும், அதற்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தேர்தல் ஆணையம் தீர்மானம் எடுத்தாலும் அதை நடைமுறைப்படுத்த முடியாமல் ஆணையம் பட்டபாடுகளும், திண்டாட்டமும் தெரிந்தவைதான். நீண்ட கால இழுபறிகளுக்குப் பின்னர்தான் ஒரு சில விவகாரங்களில் நியாயமான பதில் நடவடிக்கைகளை ஆணையத்தினால் நிறைவேற்ற முடிந்தது. அதுவும் கூட பல மீள் நினைவூட்டல் கடிதங்கள், கெஞ்சல்கள், வேண்டுதல்களின் பின்னரே சாத்தியமாயிற்று. இன்னும் சிலவற்றில் ஆணையம் எடுத்த முடிவை - தீர்மானத்தை - அதனால் நடைமுறைப்படுத்தவே முடியவில்லை. நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அதிகாரத் திமிருடன் செயற்படுவோருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கத் திராணியற்ற - லாயக்கற்ற - நிலையிலேயே ஆணையம் இருக்கின்றதோ என்ற சந்தேகம் வடபகுதி நோக்கர்களுக்கு உண்டு.

இந்தச் சீத்துவதில் *"அரச சொத்துக்குச் சேதம் விளைவித்து அல்லது மதஸ்தலங்களில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு ஒருவர் நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராகத் தெரிவானாலும் அவரது எம்.பி. பதவி பறிபோகக் கூடிய வாய்ப்புகள் உள்ளன"* என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கூறினார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

மத ஸ்தலங்கள் மற்றும் புனித இடங்களில் கட்சி வேட்பாளர்களை ஊக்குவித்துப் பிரசாரம் மேற்கொள்வது 1981 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 79 ஆம் பிரிவின் கீழ் கடுமையான குற்றமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் பழமையான இந்தச் சட்டம் நடைமுறையில் இருப்பதும், அது எவ்வளவு தூரம் பாவனையில் உள்ளது என்பதும் மக்களுக்கு நன்கு தெரியும்.

ஒருவர் தேர்தல் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்ட பின்னர், இந்தச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் நிவாரணம் பெறுவது எவ்வளவு கஷ்டமானது, சாத்தியப்பாடானது, வாய்ப்புள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

அதுவும் தொகுதி ரீதியாக நடைபெறும் தேர்தலில் இப்படி ஒருவர் இழைத்த தவறுக்கு தண்டனை வழங்கி மீள் தேர்தலுக்கு உத்தரவிடுவது குறித்துப் பல அனுபவங்கள் மக்களுக்கு உண்டு.

ஆனால், ஒரு வேட்பாளர் பட்டியலில் மக்களின் வாக்குகளை எதிர்கொண்டோரில் ஒருவர் அல்லது ஒரு சிலர் தவறிழைத்தால் மற்றையோர் பாதிக்கப்படாத வகையில் தண்டனை எப்படி வழங்கப்படும் என்பது இன்னும் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை.

இத்தகைய பழைய சட்டங்கள் இப்போதைய சுயாதீன தேர்தல் ஆணைய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சூழலில் எவ்வாறு வாய்ப்பாகப் பயன்படுத்தப்பட முடியும்? தவறு செய்தோரைத் தண்டிக்கும் விடயத்தில் கால நீட்சி மற்றும் இழுபறிகள் இல்லாமல் நீதி நிவாரணத்தைப் பெறுவதற்கு தேர்தல் ஆணையம் எப்படி உதவும் எவ்வாறு உதவும் என்பவை குறித்துத் தேர்தல் ஆணையாளர் எதுவும் விளக்கம் தரவில்லை.

அப்படியில்லாமல் நாட்டில் நீண்ட காலம் சட்ட அலுமாரியில் அடுக்கப்பட்டிருக்கும் பழைய சட்ட வாசகங்களைத் தூசு தட்டி எடுத்து, ஆணையாளர்கள் வாசித்துப் பார்த்து விட்டு மக்களுக்கு அறிவிப்பு விடுப்பதில் அர்த்தமில்லை.

உதாரணத்துக்கு மத ஸ்தலங்கள் மற்றும் புனித இடங்களில் கட்சி வேட்பாளர்களை ஊக்குவித்து பிரசாரம் செய்யப்படுவது குறித்துத் தமக்கு ஒரு முறைப்பாடு கிடைத்தால் தாங்கள் எவ்வாறு விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள், கால தாமதமின்றி இவ்விடயத்தில் நீதி நிலை நாட்டப்படுவதற்கு புதிதாக என்ன ஒழுங்குகள் செய்யப்படிருக்கின்றன, மக்கள் அதனை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பன குறித்தெல்லாம் தேர்தல் ஆணையாளர் ஏதும் கூறியிருந்தால் அதில் பிரயோசனமுண்டு.

அதை விடுத்து, பழைய, நீண்ட காலச் சட்டங்களை மக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் நினைவூட்டுவதும் -

அச்சட்டங்களின் மூலம் புதிய ஏற்பாடுகள், ஒழுங்கு விதிகளின் கீழ் விரைந்து தாமதமின்றி நீதி கிட்டுவதை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குகள் ஏதும் இல்லாத நிலையில் அது குறித்தும் பிரபலாபிப்பதும் அர்த்தமற்ற - பயனற்ற - அபத்த - நடவடிக்கைகளாகும்.

# 'உதயன்' விநியோகித்த சுமந்திரன்!





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூலை04

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இளங்கலைஞர் மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றபோது அதில் பங்குகொள்ள வந்த கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் திடீரென ஒரு தொகை இன்றைய 'உதயன்' பத்திரிகையை எடுத்துகூட்டத்தில்பங்குபற்றியோருக்கு விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர்கள் அனவரும் பங்குபற்றினர்.

கூட்டமைப்பின் வேட்பாளராக உதயன் நிர்வாகி ஈ.சரவணபவன் போட்டியிடும் நிலையிலேயே இந்தப் பத்திரிகை விநியோகத்தில் சுமந்திரன் ஈடுபட்டார். அச்சமயம் கூட்டத்துக்கு சரவணபவன் வருகை தந்திருக்கவில்லை.

இன்றைய 'உதயன்' பத்திரிகையில் சுமந்திரனிற்கு எதிரான தலைப்புச் செய்தி முன்பக்கத்தில் பெரிதாகப் பிரசுரமான நிலையில் "எனக்கு இலவச விளம்பரத்தினை மேற்கொண்ட பத்திரிகையின் சீத்துவத்தை நம் உறுப்பினர்கள் அறிய வேண்டும் என்பதற்காக நூறு பத்திரிகையை என் பணத்தில் கொள்வனவு செய்து இலவச விநியோகம் செய்கின்றேன்" – என சுமந்திரன் அச்சமயம் தெரிவித்தார்.

இதன்போது அங்கே பிரசன்னமாகியிருந்த கட்சியின் தலைவர் மாவை .சேனாதிராசா "அவர்தான் வேணும் என்று செய்கின்றார் என்றால் நீங்களும் அதனைக் காவித் திரிகின்றீர்களா?" என கேள்வி எழுப்பியமையையும் அதற்கு சுமந்திரன் சூடாகப் பதில் கொடுத்தமையையும் அவதானிக்க முடிந்தது.

இந்தப் பத்திரிகைச் செய்தி குறித்து மாவை சேனாதிராசா, சித்தார்த்தன் போன்றோர் தமது உரைகளில் சூசகமாக விசனம் தெரிவித்த நிலையில் இக்கூட்டத்திற்கு வந்திருந்த சரவணபவன் சொற்ப நேரத்தில் அங்கிருந்து நடையைக் கட்டினார்.

# வெளிநாட்டுத் தூதரகங்களால் இலங்கையில் ஆட்சி நிர்ணயம்



## அனுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 04

இலங்கையில் ஆட்சிக்கு வந்த பல அரசுகளை ஆட்சியில் அமர்த்தியது நாட்டு மக்கள் அல்ல எனவும் வெளிநாட்டுத் தூதரகங்களே அரசுகளை ஆட்சியில் அமர்த்தியதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையில் தலைவர்களை உருவாக்கவும், அரசுகளை ஆட்சியில் அமர்த்தவும் இந்திய மற்றும் அமெரிக்கத் தூதரங்கள் தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றன. மக்கள் வாக்களிக்கின்றனர். ஆனால் மக்கள் தலைவர்களையும், அரசுகளையும் தெரிவு செய்வதில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஈஸ்டர் தாக்குதல்கள், எம்.சீ.சீ உடன்படிக்கை என்பனவே பிரதான தொனிப் பொருள்களாக இருந்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் அணியை சேர்ந்தவர்கள் எம்.சீ.சீ. உடன்படிக்கையை தோற்கடிக்க தமது அணிக்கு வாக்களிக்குமாறு கூறினார். எனினும் ஆட்சிக்கு வந்த பின்னர், அந்த உடன்படிக்கையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

நவம்பர் மாதம் பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ இந்த உடன்படிக்கையை ஆராய வேண்டும் எனக் கூறினார். இந்த உடன்படிக்கையை ஆராய புதிய அரசுக்கு தாம் ஆறு மாத காலத்தை வழங்குவதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

மே மாதம் அந்த ஆறு மாதங்கள் நிறைவடைந்தது. கொரோனா காரணமாக தேர்தலை நடத்த முடியாமல் போனது. தேர்தல் ஆகஸ்ட் மாதத்திற்கு தள்ளிப்போனது.

தற்போது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமெரிக்கத் தூதரகம் புதிய அரசாங்கத்திற்கு ஓகஸ்ட் மாதம் வரை கால அவகாசத்தை வழங்குவதாக கூறியுள்ளது. இது எதற்காக தேர்தல் முடியும் வரை. அப்படியானால் இது யார் ஆட்சிக்கு கொண்டு வந்த அரசு.

எம்.சீ.சீ உட்னபடிக்கையை கிழித்தெறியுமாறு கூறியே மக்கள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தனர். ஆனால், ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எம்.சீ.சீ. உடன்படிக்கையில் கையெழுத்திடுவதை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை ஒத்திவைத்துள்ளது – என்றார்.

# 14,000 சிகரெட்டுகளுடன் சீனப் பெண் ஒருவர் கைது!

சுங்கவரி செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட 14,000 சிகரெட்டுகளுடன் சீன பிரஜை ஒருவர், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றிரவு கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை வீதியில் இக்கைது இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் கல்கிஸ்ஸை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, குறித்த சிகரெட்டுகளுடன் சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

55 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையோடு, அவர் தங்கியிருந்த அறையிலிருந்து சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரை இன்று கல்கிஸ்ஸை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# எல்லா வழக்குகளும் இனி ஒன்லைனில் விசாரிக்கப்படும்

சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜூலை மாதம் 6ஆம் திகதியிலிருந்து அனைத்து நீதிபதிகளும் வழக் குகளைக் காணொலி வாயிலாக விசாரிப்பார்கள் என அறிவிக் கப்பட்டுள்ளது.

தலைமை நீதிபதி ஏ.பி.சாஹி தலைமையில் நடந்த அனைத்து நீதிபதிகள் கூட்டத்தில், இந்த முடிவு எடுக்கப்



பட்டுள்ளது. கொரோனா ஊரடங்கு காரணமாக இரண்டு நீதிபதிகள் அடங்கிய இரண்டு அமர்வும், தனி நீதிபதிகளும் வழக்குகளை விசாரித்து வந் தனர். இனி எல்லா வழக்குகளுக்கும் ஒன்லைன் மூலமாக விசாரணைகள் நடைபெறும் என அறி விக்கப்பட் டுள்ளது.

ஊரடங்கு காரணமாக ஒன்லைன் மூலமாக ஒரு சில வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அனைத்து வழக்குக ளும் ஒ லைனில் விசாரிக்கப்படும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

# கீழடி அகழ்வில் எடைக் கற்கள்

கீழடியிலும் அதனை ஒட்டியுள்ள அகரம், கொந்தகை, மணலூர் பகுதிகளிலும் மாநில தொல்லியல் துறை தற் போது அகழாய்வுகளை நடத்திவருகிறது.

கீழடிப் பகுதியில் நடந்துவரும் ஆறாவது கட்ட அக ழாய்வில் இதுவரை எடைக் கற்கள் 4 கண்டெடுக்கப் பட்டன. கீழடி பகுதியில் வெட்டப்பட்ட ஆய்வுக் குழி ஒன் றில், இரும்பு உலை போன்ற அமைப்பு ஒன்றும் வெளிப்



பட்டது. அதில் இருந்து 8 கிராம், 18 கிராம், 150கிராம், 300 கிராம் ஆகிய வெவ்வேறு நிறைகளிலான 4 எடைக் கற்கள் எடுக்கப்பட்டன.

இந்த எடைக் கற்கள் கறுப்பு நிறத்தில் உருளை வடி வில் இருந்தன. இவற்றின் அடிப்பாகங்கள் தட்டையாக இருந் ததுடன் மேற் பகுதி பளபளப்பாக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதியில் வணிகம் நடைபெற்றிருப்பதை இந்த எடைக் கற்கள் உணர்த்துகின்றன என்று ஆய்வாளர்கள் கருது கின்றனர்.

# எல்லையை எவருமே ஆக்கிரமிக்கவில்லையா?

## மோடியிடம் ராகுல் கேள்வி



சீனா நமது நிலத்தை ஆக்கிர மித்துக் கொண்டதாக லடாக் பகுதி யைச்சேர்ந்தவர்கள்கூறுகிறார்கள். ஆனால் பிரதமர் மோடியோ நமது நிலத்தை யாரும் பறிக்க வில்லை என்று சொல்கிறார். இதில் யார் பொய் சொல்கிறார்கள் என்று ராகுல் காந்தி கேள்வி எழுப் பினார். லடாக்கில் இந்திய நிலப்பகு தியைச் சீனா ஆக்கிரமித்திருப்பதாக லடாக்கைச் சேர்ந்த வர்கள் பேசும் காணொலி களையும், குரல் பதிவையும் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் பதிவிட்ட ராகுல் காந்தி, எல்லையில் மோடி ஆற்றிய உரையின் பின்னர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

# பொலிஸாருக்குள் உளவாளிகள் விசாரணைகளில் புதிய தகவல்கள்!

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரில் நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்ய முயன்றபோது அங்கு அவரது குழு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எட்டுப் பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

குற்றப் பின்னணியை உடைய (ரவுடி) விகாஷ் துபே எனும் நபரைப் பொலிஸார் கைது செய்ய முயன்ற போதே இந்தச் சம்பவம் நடந்தது.

இந்த நிலையில், பொலிஸார் மீது சூடு நடத்திய நபருக்கு உளவு பார்த்துத் தகவல் பரிமாறினார் என்ற குற்றச்சாட்டில் ஆய்வாளர் ஒருவர் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளார். இந்தச் சம்பம் தொடர்பில் நடந்து வரும் விசாரணையில் பல அதிர்ச்சிக்குரிய தகவல்கள் கிடைத் துவருகின்றன. விகாஸ் துபேவின் குற்றங்களுக்குச் சில பொலிஸார் உதவியது தெரியவந்துள்ளது.

விகாஸைப் பொலிஸார் கைது செய்யவுள்ள தக வலை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்வதற்கு முன்பே விகாக்குத் தெரியப்படுத்தியுள்ளார் பொலிஸ் ஆய்வாளர் ஒருவர். அவர் கண்டுபிடிக்கப்பட்டு விசார ணைக்குட்படுத் தப்பட்டுள்ளார். இதனிடையே, விகா ஸின் வீடு கான்பூர் வளர்ச்சி ஆணையகத்தின் அனுமதி யின்றிக் கட்டப்பட்ட தால் இடித்து தரைமட்டமாக்கப் பட்டது.

# கோவையில் சோகம் 8 வயது யானை சாவு!



தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி யில் அமைந்துள்ள கோவை காட்டுப் பகுதியில 8 வயதுடைய ஆண் யானை ஒன்று இன்று உயி ரிழந்தது.

நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையிலேயே அந்த யானை உயிரிழந்தது. குறித்த காட்டுப் பகுதியில் யானைகளுக்கு ஒதுக் கப்பட்ட கோட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் 12 யானைகள் உயிரிழந்துள்ளன என்றும் தெரி விக்கப்படுகிறது.

யானைகளுக்குள் நடக்கும் மோதல், யானை களின் வீதிகள் ஆக்கிரமிப்பு, மனித விலங்கு மோதல், நோய்த்தொற்று ஆகிய காரணங்களே யானைகளின் இந்தத் தொடர் உயிரிழப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

உயிரிழந்த யானைகளின் உடல்களை ஆய்வு செய்தபோது அவற்றின் வயிற்றுப்பகுதி, குடல் மற்றும் கல்லீரல் உள்ளிட்ட பாகங்களில் நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகக் கோவை மாவட்ட வனக் கால்நடை அலுவலர், மருத்துவர். சுகுமார் தெரிவித்தார். கோவை வனக் கோட்டத்தில் நிகழ்ந்து வரும் இந்தத்தொடர் யானை உயிரிழப்புகள் வனவிலங்கு ஆர்வலர் கள், சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள், மாவட்ட வனத்துறையினர் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# மடக்கிப் பிடிக்கப்பட்டார் தப்பியோடிய முத்துராஜ்



இந்தியாவின் தமிழக மாநிலம் சாத்தான்குளம் பகுதியில் பொலிஸ் தடுத்து வைப்பில் அடுத்தடுத்து உயிரிழந்த தந்தை – மகன் விவகாரம் தொடர்பான வழக்கில் இதுவரை நான்கு பொலிஸாரைச் சி.பி. சி.ஐ.டியினர் கைது செய்திருந்தனர்.

இந்த நிலையில் தலைமறைவாகியிருந்த சாத்தான்குளம் பொலிஸ் அதிகாரியான முத்துராஜ் நேற்றுக் கைது செய்யப்பட்டார். இந்தக் கொலை வழக்கிலிருந்து தப்பித் தலைமறைவாகியிருந்த முத்துராஜ் தேடப்பட்டுவந்த நிலையில், அவர் தூத் துக்குடியை சேர்ந்த வழக்கறிஞர் ஒருவருக்கு அலைபேசித் தொடர்பை ஏற்படுத்திப் பேசியுள்ளார்.


அந்த அலைபேசித் தொடர்பின் மூலத்தைக் கண்டுபிடித்ததில் அவர் விளாத்திக்குளம் எனும் பகுதிக்கு அருகே உள்ள பூசனூர் கிராமத்தில் பதுங்கி இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து அங்கு சென்ற சி.பி.சி.ஐ.டி பொலிஸார் முத்துராஜைக் கைது செய்தனர். பின்னர் தூத்துக்குடியில் உள்ள சி.பி.சி.ஐ.டி அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப் பட்ட முத்துராஜ் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். காவலர் முத்துராஜ் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பின்னர், மருத்துவ பரிசோதனைக்காக அவர் தூத்துக்குடி அரச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் தூத்துக்குடி மாவட்ட முதன்மை நீதிபதி முன்நிறுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை சிறையில் அடைக்க உத்தரவிடப்பட் டுள்ளது

# எல்லையில் பேசிய மோடி ஏன் சீனாவின் பெயரை கூறவில்லை?

## ப.சிதம்பரம் கேள்வி





சீனாவுடனான எல்லை மோதல் குறித்துப் பேசுகின்ற இந்தியப் பிரதமர் மோடி ஏன் சீனாவின் பெயரைக் குறிப்பிடாமல் பேசுகிறார்? இதன் மர்மம் என்ன என்று ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று திடீர் பயணமாக லடாக் சென்ற மோடி அங்கு இந்தியச் சிப்பாய்களிடையே உரையாற்றினார். உங்க ளின் வீரமும், துணிச்சலும் உலகிற்கு இந்தியாவின் வலிமையைப் பறைசாற்றியுள்ளது. எதிரிகள் உங்க ளின் வேகத்தையும், சீற்றத்தையும் பார்த்துவிட்டார் கள்.

ஒரு நாடு (சீனா) தனது எல்லையை விரிவுபடுத்தும் காலம் எல்லாம் முடிந்துவிட்டது. அவற்றின் படைகள் தோல்வி அடைந்திருக்கிறார்கள் அல்லது திரும்பிச் சென்றி ருக்கிறார்கள் என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பா.சிதம்பரம், எந்த உரையிலும் ‘சீனா’ என்று பிரதமர் மோடி குறிப்பி டுவதில்லையே, இதன் மர்மத்தை யாராவது விளக்கு வார்களா? இந்திய நிலப்பகுதியில் ஆக்கிரமித்து சீனத் துருப்புகளா அல்லது சந்திரமண்டலத்திலிருந்து வந்த அந்நியர்களா? பிரதமர் மோடி அஞ்சுகிறார் என்று சொல்ல மாட்டேன், ஆனால் தயங்குகிறார் என்று சொல்வேன். ஏன் இந்தத் தயக்கம்? என்று கேள்வியெழுப்பினார்.

# பட்டாசுத் தொழிற்சாலையில் விபத்து துருக்கியில் 4 பேர் பரிதாபச் சாவு



துருக்கியில் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர்.

97 பேர் படுகாயமடைந்தனர். துருக்கியின் சஹர்யா மாகாணம் ஹெண்டிக் நகரில் உள்ள பட்டாசுத்தொழிற்சாலையே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இதன் காரணமாக அங்கு தயாரிக்கப்பட்டிருந்த பட்டாசுகள் அனைத்தி தீ பற்றியதால் பயங்கரச் சத்தத்துடன் அவை வெடித்துச் சிதறின. அதனால் தொழிற்சாலை முற்றிலுமாகச் சிதைந்துபோனது. வெடி விபத்தின்போது அங்கு 180க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தகவலறிந்து சம்பவ இடத்தைச் சென்றடைந்த தீயணைப்புத் துறையினர் தொழிற்சாலைக்குள் சிக்கிய நபர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஜமால் கொலை சதி குறித்து காதலியிடம் விசாரணை!



சவூதி அரேபியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கசோக்ஜி கொலை செய்யப்பட்டது தொடர்பாகச் சவூதி அரேபியாவைச் சேர்ந்த 20 பேர் துருக்கி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டனர்.

விசாரிக்கப்பட்டவர்களில் ஜமால் கசோக்ஜி திருமணம் செய்துகொள்ளவிருந்த துருக்கியைச் சேர்ந்த பெண்ணான ஹாட்டிஸ் செங்கிசும் ஒருவர். தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்களில் இரண்டு பேர், சவூதி இளவரசர் முகமது பின் சல்மானின் முன்னாள் உதவியாளர்கள். தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை இவர்கள் மறுக்கின்றனர். இவர்களோடு ஜமாலின் காதலியும் துருக்கிய நீதிமன்றில் விசாரணைக் குட்படுத்தப்பட்டமை இந்த விவகாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### பின்னணி

பிரபல பத்திரிகையாளரான ஜமால், சவூதி அரசு மீது விமர்சனங்களை முன்வைத்து வந்தார். சவூதி விவகாரங்கள் குறித்துக் காத்திரமாக எழுதும் செய்தியாளராகப் பார்க்கப்பட்டார். பத்திரிகையாளராக மட்டும் இல்லாமல் பல தசாப்தங்களாக சவூதி அரச குடும்பத்திற்கு நெருக்கமானவராக ஜமால் இருந்திருக்கிறார்.

அவர்களின் ஆலோசகராகவும் செயலாற்றி இருக்கிறார். 2017ஆம் ஆண்டு சவூதி அரச குடும்பத்துக்கும் ஜமாலுக்கும் முரண்பாடு ஏற்பட்டது. சவூதியைக் கடுமையாக விமர்சித்தார். இளவரசர் முகமது பின் சல்மானை ரஷ்ய அதிபர் புடினுடன் ஒப்பிட்டார். அதற்கு பின்பு அங்கிருந்து அமெரிக்கா சென்றார். இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்து அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் இதழில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதினார். வொஷிங்டன் போஸ்டில் அவர் எழுதிய முதல் கட்டுரையில், சவூதியில் இருந்தால் தாம் கைது செய்யப்படலாம் என்று குறிப்பிட்டு இருந்தார். இவர் 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2ஆம் திகதி துருக்கயின் இஸ்தான்புல்லில் உள்ள சவூதித் துணைத் தூதரகத்துக்குள் சென்ற பின்னர் உயிருடன் வெளியே வரவில்லை.

தூதரகத்தின் உள்ளே வைத்து, ஜமாலைச் சவூதி அரேபியாவைச் சேர்ந்த ஒரு குழு கொலை செய்தது. இந்தக் கொலைவிவகாரத்தில் சவூதியைச் சேர்ந்தவர்கள் மீது துருக்கி குற்றம் சாட்டியது. இந்தக் கொலைக்கும் முகமது பின் சல்மானுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகவும் குற்றம் சாட்டியது. இந்தக் கொலைக் குற்றச்சாட்டை முற்றுலுமாக மறுத்த சவூதி, துருக்கியிடமிருந்த தகுந்த ஆதாரங்கள் காரணமாக இறுதியில் கொலைக் குற்றத்தை ஏற்றது.

ஆனால் முகமது பின் சல்மானுக்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறி, குற்றஞ் சாட்டப்பட்டவர்களைத் தங்கள் நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற துருக்கியின் கோரிக்கையை முன்பு நிராகரித்து, இந்தக் கொலை தொடர்பாகக் கடந்த ஆண்டில் எட்டு பேருக்குத் தண்டனை வழங்கியது.

5 பேருக்கு மரண தண்டனையும், குற்றத்தை மறைத்த குற்றச்சாட்டில் மூன்று பேருக்குச் சிறை தண்டனையையும் விதித்தது. ஆனாலும் இந்தக் கொலையில் முகமது பின் சல்மானுக்குத் தொடர்பு இருப்பதாகவும், சவூதியின் உள்ளக விசாரணையில் நம்பிக்கை இல்லை என்று தெரிவித்தும் துருக்கி விசாரணைகளைத் தொடர்கிறது.

## ஆயுதம் ஏந்திய வேடுவர்களால் அப்பாவிகள் கொன்று குவிப்பு!

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

மாலியின் பேங்கஸ் மாகாணத்திலுள்ள டோகன் இன மக்கள் குழுமத்தினர் மீதே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. பேங்கஸ் மாகாணத்தில் டோகன் இன மக்கள் வசித்து வந்த 4 கிராமங்களில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

### இன மோதல்

மாலியில் இனவ மோதல்களால் மக்கள் கொல்லப்படுவது தொடர்கிறது. அந்த நாட்டின் பேங்கஸ் மாகாணத்தில் உள்ள கிராமங்களில் புலானி எனப்படும் பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கிறார்கள். கால்நடை மேய்ப்பதை முதன்மைத் தொழிலாகக் கொண்ட இவர்களுக்கும், டோகன் எனப்படும் ஆயுதம் ஏந்திய வேட்டைக்காரர்களுக்கும் இடையே முரண்பாடு நிலவுகின்றது.

அவ்வப்போது மோதல் ஏற்படுகிறது. பேங்கஸ் மாகாணத்தில் டோகன் இன மக்கள் வசித்து வந்த 4 கிராமங்களுக்குள் புகுந்த புலானி பழங்குடியின மக்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ‘டிக் டொக்’ தடையால் ரூ. 45,000 கோடி இழப்பு

இந்தியாவில் ‘டிக் - டொக்’ செயலி மீது விதிக்கப்பட்ட தடையால், அதன் நிறுவனமான பைட் - டான்ஸ் நிறுவனத்துக்கு 45ஆயிரம் கோடி ரூபா (இந்திய மதிப்பில்) வருமான இழப்பு ஏற்படும் என்று சீனாவின் அரசு ஊடகம் ஒன்று கருத்துத் தெரிவித்துள்ளது.

சீனாவின் செயலிகளைத் தடை செய்யும் இந்திய அரசின் முடிவால் டிக் - டொக், ஹலோ ஆகிய செயலிகளின் தாய் நிறுவனமான ’பைட் - டான்ஸ்’ இற்கு 45 ஆயிரம் கோடி வரை இழப்பு ஏற்படும். செல்போன் செயலிகளை ஆய்வு செய்யும் ‘சென்சார் டூவர்’ நிறுவனம் அளித்துள்ள புள்ளிவிவரப்படி, கடந்த மே மாதம் டிக் - டொக் செயலி 11.2 கோடி முறை பதிவிறக்கம் செய்யப்பட் டுள்ளது என்று சீன அரச ஊடகமான ’குளோபல் ரைம்ஸ்’ தெரிவித்துள்ளது.

டிக் டொக் உள்ளிட்ட 59 செயலிகளுக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளதாலேயே இந்த இழப்பு நேர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவில் பதிவிறக்கம் செய்யப்படுடவதைவிட இரு மடங்கில் இந்தச் செயலி இந்தியாவில் பதிவிறக்கம் செய்யப்பட்டு வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்திய அரசு தடை விதித்ததால், சீன முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் நம்பிக்கையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிக் - டொக் செயலிக்கு அதிக வருமாகம் வழங்கும் நாடாக இந்தியா இல்லாவிடினும் அந்தச் செயலியை அதிகம் பதிவிறக்கம் செய்த முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இந்தியச் சந்தையில் பைட் - டான்ஸ் நிறுவனம் சுமார் 7ஆயிரத்து 473 கோடி முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## போராட்ட முழக்கத்துக்கு ஹொங்கொங்கில் தடை!

ஹொங்கொங் மக்களின் போராட்ட முழக்கத்துக்கு அந்தநகர அரசு தடைவித்தித்துள்ளது. ஹொங்கொங்கை விடுவிப்பது, நமது காலத்தின் புரட்சி என்று ஹொங்கொங் போராட்டக்காரர்களிடையே பிரபலமான கோத்துக்கே அங்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. உரத்துக் கத்தியவாறும், தாம் ஏந்தும் கொடிகளிலும் போராட்டக்காரர்கள் இந்த வாக்கியத்தை உச்சரித்து வந்த நிலையில் இந்தத் தடை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஹொங்கொங் தொடர்பாகச் சீன அரசு இயற்றியுள்ள புதிய பாதுகாப்புச் சட்டப்படி இந்த முழக்கம் பிரிவனைவாத்தைக் குறிக்கின்றது என்று கூறப்படுகிறது. சீனாவின் சிறப்பு ஆளுகைக்குள் இருக்கும் ஹொங்கொங்கை விடுவிக்க வேண்டும் என்று கோருவதாக இருக்கிறது. எனவே அந்த முழக்கத்துக்கு தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது ஹொங்கொங் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனா நடைமுறைப்படுத்தியுள்ள புதிய பாதுகாப்புச் சட்டத்தின்படி பிரிவினைவாதம், பயங்கரவாதம், வன்முறையில் ஈடுபடுதல், வெளிநாட்டு அமைப்புகளுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டுக்கு எதிராகச் செயற்படுதல் போன்றவை தண்டனைக்குரிய குற்றங்களாக மாற்றப்பட்டுள்ளன.

## ஹொங்கொங் விவகாரம்

## களமிறக்கப்பட்டார் கொடூர அதிகாரி; ஜனநாயக ஆர்வலர் தப்பியோட்டம்!

சீனாவின் புதிய பாதுகாப்புச்சட்டம் நடைமுறைக்கிடப்பட்டதையடுத்து ஹொங்கொங்கின் முக்கிய ஜனநாயக ஆர்வலரான நாதன் லா ஹொங்கொங்கிலிருந்து வெளியேறியுள்ளார்.

ஹொங்கொங்கில் சீனாவின் புதிய தேசிய பாதுகாப்புச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. தற்போது ஹொங்கொங்கின் பாதுகாப்புப் படைத் தலைவராக ஜோங்ஜியாங் என்ற புதிய அதிகாரியை சீனா நியமனம் செய்துள்ளது.

இந்த அதிகாரி போராட்டக்காரர்களைக் கொடூரமாக ஒடுக்கும் முறையைப் பின்பற்றுபவர் எனப் பரவலாக கருத்துக்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன. இந்த நிலையில், ஹொங்கொங்கின் மிகவும் பிரபலமான ஜனநாயக ஆர்வலர் நாதன் லா ஹொங்கொங்கைவிட்டுவெளியேறிவிட்டதாகத் தனது முகநூலில் தெரிவித்துள்ளார்.

# நாட்டைப் பிளவுபடுத்த சஜித் முயற்சி: ஒருபோதும் இடமளிக்கவேமாட்டோம்

## மஹிந்த அணி திட்டவட்டம்

வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ 13ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று அதிகாரத்தைப் பகிர்வதாக வாக்குறுதி வழங்கியுள்ளார். அரசியல் நோக்கங்களுக்காக நாட்டைப் பிளவுபடுத்த ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். சஜித் பிரேமதாஸ பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டால் நாடாளுமன்ற உறுப்புரிமையை நான் சுயமாக இராஜினாமா செய்வேன்.

– இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன சவால் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கி இராணுவத்தினரைப் படுகொலை செய்ய வழி செய்தார் என்பது தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. இவரைப் பின்பற்றியே சஜித் பிரேமதாஸ 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாட்டைப் பிளவுபடுத்த முயல்கின்றார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் 113 உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரதமராகினால் நான் நிச்சயம் எனது நாடாளுமன்ற உறுப்புரிமையை சுயமாக இராஜினாமா செய்வேன் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு தனிச் சிங்கள பௌத்த மக்களும், கத்தோலிக்க மக்களும் வாக்களிக்கமாட்டார்கள். இதன் காரணமாகவே சஜித் குழுவினர் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் ஆதரவை எதிர்பார்த்து நடைமுறையில் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தி பொதுத்தேர்தலில் படுதோல்வியடையும் என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது – என்றார்.

# வடக்கு கடல் பகுதியில் கண்காணிப்புத் தீவிரம்

இந்தியாவில் அகதிகளாக வாழும் ஈழத் தமிழர்களில் ஒரு சிலர் அங்கிருந்து அனுமதியின்றி கடல் வழியாக இலங்கைக்குள் நுழைந்ததை அடுத்து வடக்குக் கடல் பகுதியில் கடற்படையினர் தமது சுற்றுக்காவல் மற்றும் சோதனைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கொவிட் – 19 பெருந்தொற்று இந்தியாவில் மிக வேகமாகப் பரவி வரும் நிலையில் அங்குள்ள ஈழத் தமிழர்கள் தமிழகத்தில் இருந்து தப்பி கடல் வழியாக நாட்டுக்குள் நுழைந்துவிடக்கூடும் என்கிற அச்சம் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அதிகாரிகள் அச்சப்படும் அளவிற்குப் பெரும் எண்ணிக்கையான அகதிகள் தமிழகத்தில் இருந்து கடல்வழியாக இலங்கைக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இருப்பினும் தமிழகத்தில் இருந்து வரக்கூடிய ஊடுருவல் குறித்து வடக்கில் உள்ள கடற்படையினர், கரையோரக் காவல் படையினர், கிராம அலுவலர்கள், மீனவர் சங்கங்கப் பிரதிநிதிகளை விழிப்போடு இருக்கும்படி கேட்டிருக்கின்றார் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.சார்ள்ஸ் தி இந்து ஆங்கிலப் பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

கொரோனா பெருந்தொற்று நிலமை காரணமாக இந்தியாவில் இருந்து ஈழ அகதிகள் சிலர் இலங்கை திரும்புவதற்கு முயற்சிக்கிறார்கள் என்று எமக்குச் சில செய்திகள் கிடைத்தன, அப்படிப்பட்டவர்கள் படகுகள் மூலம் கடல் வழியாக இலங்கைக்குள் அனுமதியின்றி நுழையக்கூடும் என்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

தமிழகம், கோயம்புத்தூரில் உள்ள புளுவப்பட்டி அகதிகள் முகாமில் இருந்து தந்தையும் மகளும் கடந்த ஜூன் மாதம் படகு மூலம் மன்னாருக்குத் திரும்பியிருந்தனர். அதன் பின்னர் சில நாள்களுக்கு முன்னராக மற்றொரு நபரும் இவ்வாறு கடல் வழியாக அனுமதியின்றி இலங்கைக்குள் வந்திருந்தார்.

அவர்கள் இருவரையும் கைது செய்த பொலிஸார், அவர்களுக்கு உதவி செய்தார்கள் என்கிற குற்றச்சாட்டில் மேலும் 6 பேரையும் கைது செய்தனர்.

கடந்த 2ஆம் திகதி தமிழ் ஊடகங்களின் செய்தி ஆசிரியர்களைச் சந்தித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சட்டத்திற்கு மாறாக கடல் வழியாக உள்நுழைவோர் குறித்துத்தானும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கவனம் செலுத்தி இந்திய ஆட்சியாளர்களுடன் பேசினார்கள் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், இலங்கை அச்சப்படுமளவிற்கு பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் இந்தியாவில் இருந்து அனுமதியின்றி கடல்வழியாகத் தப்பிச் செல்வது நடக்கக்கூடியது அல்ல என்று இந்திய கரையோரக் காவல் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நிலமையைத் தாம் மிக இறுக்கமாகக் கண்காணித்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் அச்சமடைந்திருக்கிறார்கள் என்று கூறப்படுவதும் சரியானது அல்ல என்று தெரிவித்தார்.

# அடைக்கலநாதன் குழுவினரை மக்கள் தோற்கடிக்க வேண்டும்

## வன்னி மாவட்ட வேட்பாளர் லெம்பேட் வலியுறுத்து

குறுக்கு வழியில் அரசியலுக்கு வந்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சூறையாடி நாடாளுமன்றம் சென்று சுகபோகங்களை அனுபவிக்கும் செல்வம் அடைக்கல நாதன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினரை வன்னி மாவட்ட மக்கள் இம்முறை தோற்கடிக்க வேண்டும்.

– இப்படி வலியுறுத்தியுள்ளார் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.பி.லெம்பேட் (காந்தன்) .

மன்னாரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் குறைந்தது 5 ஆசனங்களையாவது கைப்பற்றும் என்ற நம்பிக்கையில் நாம் களமிறங்கியுள்ளோம். எனவே, எமது மக்களின் பேராதரவை நாம் வேண்டி நிற்கின்றோம்.



முள்ளிவாய்க்கால் போரை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வன்னி மண்ணில் அரசியல் நடத்துகின்றனர். மக்களின் குருதி மேல் ஏறி நின்று அவர்கள் சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர். ஊழல், மோசடிகளைச் செய்துள்ளனர். இந்தப் பட்டியலில் உள்ளடங்கும் செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட குழுவினரை மக்கள் இம்முறை தோற்கடிக்க வேண்டும்.

இப்படியானவர்கள் நாடாளுமன்றம் சென்று எமது மக்களுக்கு எந்தவித பயனும் இல்லை. எனவே, மக்கள் தோழர்களாக இருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரை இம்முறை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வையுங்கள்.

வடக்கில் எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் குறைந்தது 5 உறுப்பினர்களாவது நாடாளுமன்றம் செல்ல வேண்டும். அப்போதுதான் எமது மக்களுக்கு நாம் திறம்பட சேவையாற்ற முடியும். வடக்குக்கான முழுமையான அபிவிருத்திகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும் – என்றார்.

# வாகன சில்லுக்குள் நசிபட்டு கல்முனையில் சிறுவன் சாவு

*கனரக வாகனத்தின் சில்லுக்குள் அகப்பட்ட 10 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.*

*கல்முனைப் பகுதியிலுள்ள குளம் ஒன்றினைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்ட கனரக வாகனத்தின் சில்லுக்குள் அகப்பட்டே இவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.*

*நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கல்முனை துரைவந்தியமேடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி பயின்று வந்த, மோ.ஜதுர்சன் என்ற சிறுவனே உயிரிழந்தார்.*

*உயிரிழந்த மாணவனின் சடலம், உடற்கூறு பரிசோதனைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.*

*இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# கொழும்பு துறைமுக அபிவிருத்தி குறித்து விசாரிக்க குழு நியமனம்

கொழும்பு துறைமுகத்தின் ஜயா கொள்கலன் முனையம் மற்றும் கிழக்கு முனையத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சிக்கலை ஆய்வு செய்து அறிக்கை வழங்க ஐவர் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

துறைமுகம் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயதுன்னே குழுவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் எம்.பி.டி.யு.கே.மாப்பா பத்திரன, வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.டப்ளியூ.ஆர்.பிரேமசிறி, மின்சாரம் மற்றும் கனியவள அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, இலங்கைதுறைமுக அதிகார சபையின்தலைவர் ஓய்வுப் பெற்ற ஜெனரல் ஆர்.எம்.தயா ரத்னாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

இந்தக் குழு எதிர்வரும் 45 நாட்களுக்குள் தமது அறிக்கையை முன்வைக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

# பௌத்த மதம் போன்றது ஜே.வி.பி.



## நாங்கள் துறவிகள் என்கிறார் சுனில் ஹந்துன்நெத்தி

எங்கள் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் கலாசாரம் பௌத்த மதத் கலாசாரத்துக்குச் சமமானது.


– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பௌத்த பிக்குமார்களுக்கு விகாரை அமைத்துக் கொடுத்தல், தானம் வழங்குதல், பௌத்த துறவிகளுக்கு ஆடை வழங்குதல், பிரிகர பூஜைகள் செய்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதால் பௌத்த துறவிகளுக்கு எந்தப் பிரச்சினைகளும் ஏற்படாது.

மக்கள் விடுதலை முன்னணி பௌத்த துறவிகளுக்குச் சமமானது. நாங்கள் செய்யும் சேவையானது தன்னார்வச் சேவை – என்றார்.



## மேலும் ஒருவருக்கு இன்று கொரோனா

இலங்கையில் மேலும் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இன்று காலை சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இவருடன் சேர்த்து நாட்டில் மொத்தமாக தொற்றுக்கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 70 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் மேலும் 22 பேர் குணமடைந்து இன்று சனிக்கிழமை வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, இதுவரை தொற்றிலிருந்து ஆயிரத்து 885 பேர் குணமடைந்துள்ளனர் 174 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

## இலங்கைக்கு இடமில்லை!

பிரிட்டனுக்குள் நேரடியாக அனுமதிக்கப்படக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் நாடுகள் பட்டியலில் இலங்கை சேர்க்கப்படவில்லை.

14 நாள் கட்டாய தனிமைப்படுத்தல் இல்லாமல் 50க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் ஜூலை 10 வெள்ளிக்கிழமை முதல் பிரிட்டனிற்குள் அனுமதிக்கப்பட உள்ளார்கள்.

இந்தப் பட்டியலில் இலங்கை இடம்பெறவில்லை. நாட்டில் கொரோனா பரவல் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது என்று அதற்கான சிறப்புச் செயலணியின் தலைவரான இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்திருந்தார் எனினும் இந்தப் பட்டியலில் இலங்கைக்கு இடம் கிடைக்காதது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குறைந்த ஆபத்து என இப்போது தான் பட்டியலிட்டுள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகள் தம்மைச் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கத் தேவையில்லை என பிரித்தானியா அரசு அறிவித்திருந்தது.

ஜேர்மனி, நியூசிலாந்து, நோர்வே, போலந்து, ஹொங்கொங், தென்கொரியா, சுவிட்சர்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தபட்டியலில்சேர்க்கப்படாத நாடுகளில் அமெரிக்காவும், சீனாவும் உள்ளன.

அண்மையில் ஐரோப்பிய ஒன்றியமும் இதேபோன்ற பட்டியலை வெளியிட்டது, இதிலும் இலங்கையும் அமெரிக்காவும் சேர்க்கப்படவில்லைஎன்பதுசுட்டிக் காட்டத்தக்கது.

# இராணுவ ஆட்சிக்கு அங்கீகாரம் பெறவே துடிக்கின்றது அரசு!

## கோட்டாவின் நடவடிக்கைகளினால் மக்கள் விரக்தி என்கிறது சோசலிச சமத்துவக் கட்சி

அரசு இராணுவ ஆட்சியை அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அதனை அங்கீகரித்துக்கொள்ளவே பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளஅரசுமுயற்சிக்கின்றது.

– இவ்வாறு சோசலிச சமத்துவக் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் மயில்வாகனம் தேவராஜா தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தியஊடகவியலாளர்சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல்வேறு வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்து சில மாதங்களிலே அவரின் நடவடிக்கைகள், வேலைத் திட்டங்கள் தொடர்பில் மக்கள் விரக்தியுற்றிருக்கின்றனர். ஒழுக்கமுள்ள சமூகம், சட்டத்தின் ஆட்சி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம் போன்ற வாக்குறுதிகளை அவர் முன்வைத்திருந்தார். ஆனால், அந்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை.

நாட்டை இராணுவ ஆட்சிக்கு கொண்டு செல்வதற்கான வேலைத் திட்டம் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. அரச துறைகளின் பிரதான நிறுவனங்களின்தலைவர்களாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளே நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று இனங்களுக்கிடையில்முரண்பாடுகளை ஏற்படுத்தி அதன் மூலம் தங்களின் ஆட்சியை உறுதிப்படுத்துக்கொள்ளும் வேலைத்திட்டத்தையும் இந்த அரசு முன்னெடுத்துச் செல்கின்றது.

முதலாளித்துவ ஆட்சியில் சாதாரண மக்களின் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு கிடைக்கப்போவதில்லை. சோசலிசவாதிகள் எனத் தெரிவித்துக் கொண்டு முதலாளித்துவ கட்சிகளுடன் சிலர் இணைந்து செயற்படுகின்றனர். அவர்களால் ஒருபோதும் தொழிலாளர்களின்உரிமைகளைப்பெற்றுக்கொடுக்க முடியாது.

உலகளாவிய ரீதியில் பாரிய பொருளாதார பிரச்சினைக்குப் பல நாடுகள் முகம்கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இது கொரோனா வைரஸினால் ஏற்பட்ட தொன்றல்ல. முதலாளித்துவகொள்கையில் இருக்கும் பிரச்சினையாகும்.

அதனால்முதலாளித்துவஆட்சிக்கு எதிராக எமது கட்சி சர்வதேச ரீதியில் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அதன் பின்னணியாகவே யாழ்ப்பாணத்தில் எமது கட்சி வேட்பாளர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக நாங்கள் முறைப்பாடு செய்தும் இன்னும் பதில் இல்லை. எனவே, முதலாளித்துவ ஆட்சியை இல்லாதொழித்து, தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தைப் பாதுகாக்கவே நாங்கள் இம்முறை தேர்தலில் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் கத்தரிக்கோல் சின்னத்தில் போட்டியிடுகின்றோம் – என்றார்.

## பிரதேச செலர்களிடம் வனப் பகுதிகளை அரசு ஒப்படைப்பதற்குக் கடும் எதிர்ப்பு

வன உயிரிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள 5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள வனப்பகுதியை பிரதேச செயலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வழங்குவதற்கு அமைச்சரவை அண்மையில் எடுத்த முடிவுக்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இந்த முடிவை உடனடியாக இடைநிறுத்தக் கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி. கடிதம் எழுதியுள்ளது.

கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவால் அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில், நிலப்பரப்பு தொடர்பாக ஏற்கனவே உள்ள சுற்றறிக்கையை நீக்குவது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு வழிவகுக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுபோன்ற வனப்பகுதிகளில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் பூர்வீக விலங்குகள் மற்றும் தாவரங்கள் சமீப காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டன, எனவே வனப் பாதுகாப்பு மற்றும் வன உயிரிகளைப் பாதுகாக்க நடைமுறையில் உள்ள சட்டங்கள் பலவீனமாக்கப்படுவது தடுக்கப்படவேண்டும் என்றும் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வனப்பிரதேசங்கள் பிரதேசசெயலர்கள் வசம் ஒப்படைக்கப்படும்போது அவை பல்வேறு பெரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும் வாய்ப்பு இருக்கின்றது என்றும் பிமல் ரத்னாயக்க தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் எஞ்சிய காடு என்ற ரீதியில் கருதப்படும் காணிப்பகுதியை மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்க அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கருணாவுக்கு தாய்லாந்தில் புனர்வாழ்வாம்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து அரசுடன் சேர்ந்துகொண்ட கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை தாய்லாந்திற்கு அனுப்பி புனர்வாழ்வுக்கு உட்படுத்தினார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

போர் காலத்தில் ஆனையிரவில் ஒரே நாளில் இரண்டாயிரம் அரச படையினரைக் கொன்றோம் என்று தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கருணா பேசிய விடயம் நாடுமுழுவதும் பெரும் சர்ச்சையாக மாறியது. இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கருணாவிடம் விசாரணைகளையும் நடத்தியிருந்தனர்.

கருணாவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்கிற கருத்துக்கள் தெற்கில் வலுத்துவருகின்றன. எனினும் அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுவிட்டதாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார்.

கருணாவின் கருத்துக்கள் தொடர்பில் அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படாதது குறித்துக் கருத்துக் கேட்டபோதே ரஞ்சித் மத்தும பண்டார ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது கருணாவைதாய்லாந்துக்கு அனுப்பி புனர்வாழ்வு வழங்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ரஞ்சித் மத்துமபண்டார மேலும் கூறியுள்ளதாவது: கருணாவை நாங்கள் சீர்திருத்தினோம். அதன் பின்னரே அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகினார்.

நாங்கள் கருணாவுக்கு வேறு எதனையும் செய்யவில்லை. ஆனால் தற்போது பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள்தான் அவரை அரசியல்வாதியாக மாற்றியுள்ளனர். எனினும் கருணா அம்மான், தனது அறிக்கை தொடர்பாக உண்மையான விளக்கத்தை கட்டாயம் வழங்க வேண்டும். மேலும் நாம், ஆட்சிக்கு வந்தவுடன் அவரை நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தல் நிலையங்களில் நான்கு பேருக்கு மலேரியா காய்ச்சல்

கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களில் மேலும் 4 மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்திக் கண்காணிக்கும் நிலையங்களில் இருந்து இதுவரை 8 மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய மலேரியா ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து வந்தவர்கள் எனவும் அவர் கூறினார்.

கம்பஹா மற்றும் மாத்தளை பகுதிகளிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களிலேயே புதிய மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து சில வருடங்களுக்கு முன்னர் மலேரியா முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தது. அதற்கான அங்கீகாரத்தை உலக சுகாதார அமைப்பு வழங்கியிருந்தது.

இதனால், தனிமைப்படுத்தல் நிலையங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள மலேரியா நோயாளர்கள் ஒரு வருடத்திற்குத் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனத் தேசிய மலேரியா ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

# பாடசாலைகளில் கற்பித்தல் திங்கள் மீண்டும் தொடங்கும்

அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நான்கு கட்டங்களில் பாடசாலைகள் மீண்டும் திறக்கும் முடிவை அடுத்து, தரம் 5, 11 மற்றும் 13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் அனைத்துப் பாடசாலைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கடமைகளுக்குத் திரும்பினர்.

ஜூலை 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், தரம் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிகைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து நான்காம் கட்டமாக தரம் 3, 4, 6, 7, 8 மற்றும் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு எதிர்வரும் 27ஆம் திகதி கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.



பூரணை தினத்தை முன்னிட்டு இன்று காலை தங்காலையிலுள்ள கால்டன் இல்லத்தில் விசேட போதனை நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரின் பாரியார் சிரத்தி ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# போதைப் பொருள் விற்ற நைஜீரியருக்குத் தூக்கு!

கொக்கைன் போதைப் பொருளை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாகக் காணப்பட்ட நைஜீரியப் பிரஜைக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று வெள்ளிக்கிழமை தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

774 கிராம் கொக்கைன் போதைப்பொருளை வைத்திருந்தமை, அதனை விற்பனை செய்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமானதால், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெத்திகே குற்றவாளிக்கு இந்தத் தண்டனையை வழங்கினார்.

2016ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி இரத்மலானை பகுதியில் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தைச் சேர்ந்த அதிகாரிகளால் நைஜீரியர் கைது செய்யப்பட்டார்.

# கட்சியை அமைப்பதிலேயே கவனம் செலுத்தினார் விக்கி

## போட்டுத் தாக்குகின்றது ஜே.வி.பி.

**கொழும்பு, ஜூலை 04**

**வடக்கு மாகாணத்தில் 5 ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்திகளை - மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது தனக்கான கட்சியை அமைப்பதிலேயே முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கவனம் செலுத்தினார்.**
**- இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளது மக்கள் விடுதலை முன்னணி.**

கிளிநொச்சியில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்தக் குற்றச்சாட்டை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க முன்வைத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இன்று நாட்டிலுள்ள செல்வந்தர்கள் வளர்ந்தவாறு செல்கின்றனர். ஏழைகள் மேலும் ஏழைகளாகவே செல்கின்றனர். அதனாலேயே பாரிய சவால்களுக்கு மக்கள் முகம் கொடுக்கின்றனர். போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் வறுமை நிலைக்குச் சென்றமைக்கு இதுவும் பிரதான காரணமாக உள்ளது.

கல்வியில் வடக்கு மாகாணம் பின்னிலைக்குச் சென்றுள்ளது. வசதிகள் கொண்ட மாவட்டங்களில் செல்வந்தர்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளில் வளங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. நீச்சல் தடாகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் வறிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு வளங்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை.

தற்போது கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த காலப்பகுதியில் இணையத்தளம் ஊடான கல்வி முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால், அதிகளவான பாடசாலை மாணவர்களிடம் சிமார்ட் தொலைபேசிகள்கூட கிடைத்திருக்கவில்லை. அவர்கள் எவ்வாறு கல்வியைத் தொடர்வது? அதனால் வளப்பற்றாக்குறை உள்ள பிரதேசங்கள் கல்வியில் பின்னிலைக்குச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

5 ஆண்டு கால வடக்கு மாகாண சபையால் மக்களுக்கு எதனைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது? தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுத்திருக்க முடியும், மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். ஆனால், அவை மேற்கொள்ளப்படவில்லை. அதிகளவான பணம் திறைசேரிக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறித்த 5 ஆண்டு காலப்பகுதியில் தனக்கான கட்சி ஒன்றை அமைப்பது தொடர்பிலேயே கவனம் செலுத்தினார். மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவரும், வடக்கு மாகாண சபையும் எதனையும் செய்திருக்கவில்லை – என்றார்.

### கணேசபிள்ளை

இதேவேளை, குறித்த ஊடக சந்திப்பில் யாழ். மாவட்ட தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான கணேசபிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் பாடசாலை காலம் முதல் சத்தியாக்கிரகம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளோம். ஆனால், இன்றுவரை எமக்கு எந்த வித விடிவும் கிடைக்கவில்லை. தொடர்ந்தும் கஷ்டத்துடனும், வேதனைகளுடனும் மனிதர்கள் இறந்து போகின்றார்கள்.

நாங்கள் வாக்களித்த கட்சிகள் வீரம் பேசி வாக்குகளைப் பெற்று அரசுடன் சந்தோசமாக இருந்துவிட்டு மீண்டும் தேர்தல் வருகின்றபோது வெளியே வந்து மீண்டும் உரிமை பற்றி பேசுகின்றார்கள். உரிமை என்பது நாங்கள் ஒன்றாக நின்று ஐக்கியப்பட்டவர்களாகப் பேசுகின்றபோதே கிடைக்கும். அதை விடுத்து தனித்தனியே நின்று கேட்பதனால் எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை – என்றார்.




### பிரான்சிஸ் ஜோசப்

யாழ். மாவட்ட வேட்பாளர் க.பிரான்சிஸ் ஜோசப் கருத்துத் தெரிவிக்கையில்–

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி திறந்த பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டு வந்தார்கள். அப்போது இலங்கையில் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகிய சட்டங்கள் அரங்கேறின. அதனால் தமிழ்மொழியைப் பேசும் இந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களாகிய நாங்கள் நசுக்கப்பட்டோம். இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள், பூஸா முகாம் அறிமுகப்படுத்தப்பட்டது. அக்காலப்பகுதியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர்களைக் கைதுசெய்ததுடன் பொருளாதாரத்திலும் கைவைத்தது.

இலங்கையில் போருக்கு வழிகோரியவர்கள் இவர்களே. இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்குக் காரணமாக இருந்தவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியினர்தான். யாழ். நூல் நிலையம் எரிக்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு வேலைகளை இவர்கள் செய்தார்கள். இவ்வாறான நிலையில் காலங்கள் மாறிய போதிலும் இன்றுவரை பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. இன்று கிராமங்களில் உள்ள இளைஞர்கள் நடுத்தெருவில் நிக்கின்றார்கள். சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றார்கள். காரணம் அவர்களுக்கான பொருளாதாரத்தை முன்னெடுக்கக் கூடிய சூழல் காணப்படவில்லை – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2020 இல் வெளியிடப்பெற்றது.